விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 281 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 10 வெள்ளிக்கிழமை (26.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான
பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-3961)
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## ஐ.நாவில் இலங்கை தொடர்பான பிரேரணை

### முக்கிய விடயங்கள் நீக்கம்

(ஜெனிவா)

ஐ.நாவில் இலங்கை தொடர்பான விவகாரங்களில் முக்கிய விடயங்கள் நீக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் அண்மையில் முன்மொழியப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தங்களின் பிரகாரம், மோதல்கள் என்ற சொல்லின் ஊடாக இனப்பிரச்சினை என்ற

15ஆம் பக்கம் பார்க்க

## தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் இன்று

- ஊரெழுவிலிருந்து நடைப் பயணம்
- 10.48 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் இன்று 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

தியாக தீபம் திலீபன் அவர்கள் பிறந்து வாழ்ந்த இடமாகிய

15ஆம் பக்கம் பார்க்க

## வான் - லொறி மோதி கோர விபத்து

## முல்லைத்தீவைச் சேர்ந்த 4 இளைஞர்கள் உயிரிழப்பு






முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பயணித்த வான் ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முல்லைத்தீவைச் சேர்ந்த 4 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகம் நீதவான் பதவி விலகல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் சுபராஜினி ஜெகநாதன் பதவி விலகியுள்ளார்.

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நீதிச்சேவை ஆணைக்குழு

15ஆம் பக்கம் பார்க்க

## நுணாவிலில் விபத்து: இளைஞன் உயிரிழப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## போதைக்கு எதிராக இலங்கை நடவடிக்கை

### ஐ.நாவில் ஜனாதிபதி அநுர



(நியூயோர்க்)

போதைப்பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றது என ஜனாதிபதி

15ஆம் பக்கம் பார்க்க

## முப்படையினருக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு

(கொழும்பு)

பொதுப் பாதுகாப்பைப் பேணுவதற்காக நாடு முழுவதும் ஆயுதப்படைகளை வரவழைத்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி

14ஆம் பக்கம் பார்க்க

## பொய் கூறி மக்களை ஏமாற்றும் அரசாங்கம்

### சபையில் நாமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அதிகளவில் பொய்கூறி மக்களை ஏமாற்றும் அரசாங்கமாக நீங்கள் இப்போது மாறியிருக்கிறீர்கள். உங்களுடைய அரசாங்கம் வெறுமனே வாய்ப் பேச்சால் ஆட்சியை செய்யும் அரசாங்கமாக மாறியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரை

14ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 20 - 09 - 1948

உதிர்வு 23 - 09 - 2025

## திருமதி சண்முகலிங்கம் சந்திராதேவி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் சந்திராதேவி அவர்கள் கடந்த 2025ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - லில்லிமலர் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும் பிரசாந்த், துஷித்தா, ரஜீவ்சாந்த் ஆகியோரின் அருமைத் தாயாரும், சுமித்திரா, கோகுலன், சத்தியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திவ்யேஷ், ரிஷிகேஷ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விஜயலக்சுமி, விசாகரட்ணம், சுதாகரன், ரமணி, மோகன், சுந்தரலிங்கம், சிவனேசலிங்கம், தேவசேனா, காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் விஜயசேனா, அமிர்தலிங்கம், பதுமசேனா ஆகியோரின் அன்பு மைத்துனியும் மண்டலநாயகி, பாமதி, காலஞ்சென்றவர்களான உருத்திராங்கதன், கனகநாயகம் மற்றும் சுந்தரலிங்கம், லோகேஸ்வரி, அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு செபரெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

(5517)

தகவல் :
குடும்பத்தினர்

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மண்மகிழ 19.07.1964

கண்நெகிழ 27.08.2025

கடந்த 27.08.2025 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## அன்னலிங்கம் அன்பழகன் [ரமேஸ்]

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண நிகழ்வும் இன்று 26.09.2025 வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-3956)

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

அண்ணாசிலையடி,
கரணவாய்,
கரவெட்டி.

T.P:077 792 6557

தகவல் : மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

---



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## பழனி சிறிதரன்

தோற்றம் 30.09.1964

மறைவு 26.09.2022

சுவாசம் போலிருந்த உங்கள் அன்பு
நினைவாக மட்டும் எஞ்சியிருக்கிறது
நாங்கள் தடுமாறும் போதும்
உங்கள் கைகளைத் தேடுகின்றோம்
ஆனால் விரல்களில் தொட்டுச் செல்வது என்னவோ
கண்ணீரின் துளிகள் மட்டுமே அப்பா...

கல்லடி, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(C-3955)

நீங்கா நினைவில்...
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை முன்னாள் பணியாளர்களினால் சீமெந்து தொழிற்சாலை ஆரம்பித்து 75 வருட நிறைவு விழா ஒன்றை நடத்துவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வடக்கு வீதியில் உள்ள "மாவைக் கந்தன்" அன்னதானசபை மண்டபத்தில் நடை பெற வுள்ளது. எனவே முன்னாள் பணியாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368


யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்து வரவும்)

(5508)


# மரண அறிவித்தல்

## திருவாட்டி. சின்னத்தங்கம் யாதவராயர்



நெடுந்தீவு மத்தி தண்டக்காரன் வளவைப் பிறப்பிடமாகவும் லண்டன், கனடா, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருவாட்டி சின்னத்தங்கம் யாதவராயர் கடந்த 22.09.2025 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-வேலாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இளையதம்பி யாதவராயர் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், ஓய்வுபெற்ற திடீர் மரண விசாரணை அதிகாரி - நெடுந்தீவு) அவர்களின் அன்பு மனைவியும் சகுந்தலாதேவி, பாலச்சந்திரன், குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோபாலகிருஷ்ணன், இசைஞானவதி, ராணிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சிதம்பரப்பிள்ளை, நாகமுத்து (தம்பையா), கணபதிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராமாசிப்பிள்ளை, பார்வதி, கமலாம்பிகை, விசாலாட்சி, கண்மணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கோசலா-அதிரதன், கோசகன்-ஜானகி, தயாளன்-பாறு, விமலன், ஜனனி-மதன்ராஜ், தினேஷ்குமார்-சுஜீவா, யாழினி - கலைக்குமார், கமலினி-ரவிந்திரா, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அரன், சாயா, றியா, செரீனா, ஜெயன், டிலானி, காவியா, கிருத்திக், ஜனுசா, லக்ஷா, நேகா, டியா, நாளா, மாயா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22/1 கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'துவாரகை'
22/1 கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(5515)

தகவல்-குடும்பத்தினர்
கு.கோபாலகிருஷ்ணன்
076 266 9992

**தோற்றம்** 17.09.1928

**மறைவு** 22.09.2025

# இராசிபலன்

26.09.2025
புரட்டாதி 10 , வெள்ளிக்கிழமை
சதுர்த்தி காலை 7.55 மணிவரை

விசாகம் முன்னிரவு 9.24 மணிவரை
சுப நேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம்10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி,அஸ்வினி

**வளவன்**

**மேஷம்** வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்** புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்,மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வாகன சுகமுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆன்மிக சிந்தனைகள் மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அதிஷ்ட வாய்ப்புகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**ரிஷபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும் நாள்.

**சிம்மம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நாள்.

**கும்பம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமளிக்கும், வீண்பழிகள் அகலும்,பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது, இனிய செய்திகள் வந்து சேரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**உன்னைவளர்ப்பது வசதிகள் அல்ல, சிரமங்களே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனை அபிவிருத்தி சபையினூடாக பனை சார் கைப்பணி பயிற்சி நெறியினை மேற்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தெரிவு செய்யப்பட்ட பனை உற்பத்தியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் வைபவமும் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (படம்:- ஜோசப் நயன்)




பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் பனை விதை நடுகை திட்டத்தின் ஆரம்பமும் பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தலைமையில் கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (படம்:- சிவசாந்தன்)



ஆர்.சசிதேவி எழுதிய இனிய நந்தவனம் நூல் வெளியீட்டு விழாவானது கடந்த 20 ஆம் திகதி எழுக மூளாய் மறுமலர்ச்சி மையத்தில் நடைபெற்றது. (படம்:- கஜிந்தன்)





தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளால் 4இலட்சம் ரூபாய் பெறுமதியான நீர்சுத்திகரிப்பு இயந்திரம் மாணவர்களின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டது. (படங்கள்:-சுபேசன்)



அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் மனைப் பொருளில் கண்காட்சி அண்மையில் இடம் பெற்றது. கல்லூரி முதல்வர் ஜெயானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மாணவர்களின் ஆக்கங்கள் பலவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (படம்:கஜிந்தன்)





சாவகச்சேரிப் பிரதேசசபையின் கச்சாய் பொது நூலகத்தினால் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாதம் ஆகியவற்றை முன்னிட்டு நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டல் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை நூலக மண்டபத்தில் நடத்தப்பட்டிருந்தது. (படம்:- சுபேசன்)



உடுவில் மகளிர் கல்லூரியின் இரண்டாவது அதிபர் எலைசா அக்னியூ ஞாபகார்த்த கட்டடத் திறப்புவிழா கடந்த 18 ஆம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. (படம்:- கஜிந்தன்)






உள்ளூராட்சி வாரத்தில் கரைச்சி பிரதேச சபையின் ஸ்கந்தபுரம் பொது நூலகம் புனரமைப்பின் பின்பு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள் :- தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்லியன் கணக்கான மக்கள் பசியில் ஆயுதங்களுக்கான செலவு கோடிக்கணக்கில்

## ஐ.நாவில் ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு



**(நியூயோர்க்)**

**ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆபத்தானது என்றாலும், அதை எதிர்த்துப் போராடாமல் இருப்பது இன்னும் ஆபத்தானது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை அமர்வில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

உலகளாவிய வறுமை, ஊழல், போதைப்பொருள் மற்றும் போர்கள் போன்ற பல சவால்களை எதிர்கொள்வதற்கு உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும்.

காசா பகுதியில் தொடர்ந்து நிகழும் மனிதாபிமானப் பேரழிவு குறித்து அவர் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார்.

மேலும், உடனடியாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும், மனிதாபிமான உதவிகள் தடையில்லாமல் வழங்கப்பட வேண்டும், பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பாலஸ்தீனத்திற்கான தனி நாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

ஊழலை ஒரு "தொற்று நோய்" என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இது அபிவிருத்தி, ஜனநாயகம் மற்றும் சமூக நலனை அழிப்பதாகக் கூறினார். இலங்கையில் ஊழலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கமளித்தார்.

"துன்பத்திலிருந்தும் இருளிலிருந்தும் விடுபட்டு, செழிப்பான தேசம் மற்றும் அழகான வாழ்க்கை" என்ற தொலைநோக்குடன் இலங்கை மக்கள் ஒன்றிணைந்துள்ளனர் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊழலற்ற, நீதிமிக்க ஆட்சி, வறுமை ஒழிப்பு, நவீனமயமாக்கல், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கி இலங்கை பயணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பில்லியன் கணக்கான மக்கள் பசியால் வாடும் நிலையில், கோடிக்கணக்கான டொலர்கள் ஆயுதங்களுக்காகச் செலவிடப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கால சந்ததியினருக்கு ஒரு பாதுகாப்பான உலகை உருவாக்குவதற்கு அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். (நி)

# சிறுவர் பாதுகாப்பு ஆபத்தில் குவியும் முறைப்பாடுகள்!

## அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1000இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தண்டனைச் சட்டத் திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, வீடுகள், பாடசாலைகள், தடுப்பு மையங்கள் மற்றும் வீதிகள் போன்ற இடங்களில் சிறுவர்கள் துஷ்பிர யோகத்திற்கு ஆளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் கிடைக்கபெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகம் என அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.



அதன்படி, கடந்த ஆண்டு 1,350 சிறுவர்கள் துஷ் பிரயோகம் செய்யப்பட்டதாக வும், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 1,126 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார். (நி)

# கேபிள் கார் விபத்து 7 பிக்குகள் உயிரிழப்பு

## பலர் காயம்

(கொழும்பு)

மெல்சிரிபுர - பன்சியகம பகுதியில் உள்ள நா உயன ஆரண்ய சேனாசனத்தில் பௌத்த பிக்குகளை ஏற்றிச் செல்லும் கேபிள் கார் அறுந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறித்த போக்குவரத்தில் ஈடுபட்ட ஏழு பிக்குகள் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரம், காயமடைந்த ஆறு பிக்குகள் குருணாகலை போதனா வைத்தியசாலை மற்றும் பொல்கஹவெல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த துறவிகளில் மூன்று வெளிநாட்டு துறவிகளும் நான்கு இலங்கை துறவிகளும் அடங்குவதாக பன்சியகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் ருமேனியா, ரஷ்யா மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது கேபிள் காரில் 13 பிக்குகள் இருந்ததாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வன மடத்தில் தற்போது பல வெளிநாட்டு துறவிகள் வசித்து வருவதாகவும் ஊடகப் பிரிவு கூறுகிறது.

துறவிகள் கேபிள் காரில் ஏறி மலை உச்சியில் உள்ள தியான பீடங்களுக்கு செல்ல புறப்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பன்சியாகம போலீசார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# பரந்தன் இரசாயன தொழிற்சாலை மீண்டும் ஆரம்பம்

## சுனில் செனவி



(கொழும்பு)

வடக்கில் நிலவிய யுத்த சூழல் காரணமாக கைவிடப்பட்டிருந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என கலாசார மற்றும் பௌத்த சாசன விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், அப்ப சோடா (கோஸ்டிக் சோடா) மற்றும் குளோரின் உற்பத்தி தொழிற்சாலையாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்திய வள ஆய்வுகள் தற்போதைக்குப் பூர்த்தியடைந்துள்ள நிலையில் நாட்டின் நீர்வளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய முக்கியத்துவமிக்க பங்களிப்பை இத் தொழிற்சாலை வழங்கும்.

தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதன் ஊடாக நேரடியாக 150 பேர் அளவில் தொழில்வாய்ப்புகளைப் பெறுவார்கள்.

மறைமுகமாக சுமார் இரண்டாயிரம் பேர் வருமானம் பெறத் தொடங்குவர்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் தனியார் மற்றும் அரசாங்க கூட்டிணைந்த வர்த்தகமாக மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தொடர்ந்தும் குறிப்பிட்டுளளார். (நி)

# மாணவர்கள் பொழுதுபோக்கிற்காக 5 ஆயிரம் ரூபாய் பிமல் முன்மொழிவு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைகளை முடிக்கும் மாணவர்களுக்கு திரைப்படம் பார்ப்பது அல்லது கடற்கரைக்குச் செல்வது போன்ற பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபட 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார்.

இதேவேளை, மாணவர்கள் திரைப்படங்கள் மற்றும் நாடகங்களைப் பார்க்கவும், நல்ல இசையைக் கேட்கவும், கடற்கரைகளுக்குச் செல்லவும், கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்கவும் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஒதுக்கீடு கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படக்கூடாது என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பள மறுசீரமைப்பு எங்கே?


# அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவனயீர்ப்புப் போராட்டம்



(சாவகச்சேரி)

பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன்வைத்து நேற்று முன்தினம் புதன் கிழமை அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கைதடியில் அமைந்துள்ள சித்த போதனா வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. இதன்போது இடைக்கால மேலதிக நேரக் கொடுப்பனவை நிறுத்தியமைக்கான காரணம் என்ன? ஆயுர்வேத வைத்திய சேவையில் சம்பள ஏற்றத் தாழ்வை உடனடியாக நிறுத்து, சம்பள மறுசீரமைப்பு எங்கே? ஆகிய கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டத்தில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# தியாக தீபம் தீலீபனின் 11 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 11ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக் கிழமை முன்னெடுக்கப்பட்டது. நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

## பருத்தித்துறையில்

## சகல வர்த்தக நிலையங்களுக்கும்

# ஞாயிறு விடுமுறை

(கரணவாய்)

**பருத்தித்துறை நகர்ப் பகுதியில் இயங்கிவரும் சகல வர்த்தக நிலையங்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் மூடப்படுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.**

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் இயங்கிவரும் அத்தியாவசிய அவசர தேவைகளுடன் தொடர்புடைய உணவகங்கள், மருந்தகங்கள், சைக்கிள் திருத்தகங்கள் தவிர்ந்த ஏனைய சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமை தோறும் மூடுவதற்கு பருத்தித்துறை வர்த்தக சங்கம் அண்மைய நாட்களில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. துறைசார்ந்த வர்த்தகர்களுடன் தனித் தனியான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு எல்லோரது ஆதரவினையும் வர்த்தக சங்கத் தினர் கோரியிருந்தனர். பலசரக்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளுடனும் பல சுற்று கலந்துரையாடல்கள்இடம்பெற்றிருந்தன.

இந் நிலையில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தித்துறை வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களையும் மூடுவது எனவும் விசேட பண்டிகை தினங்களை அண்மித்து வரும் ஞாயிற்றுக் கிழமைகளில் வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அனுமதிப்பது எனவும் குறித்த நடைமுறையானது எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு கொண்டு வருவது எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (8-60)

## மனிதவள முகாமைத்துவ கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால மனிதவள முகாமைத்துவ கற்கை நெறிக்கான (Short Course in Human Resource Management)விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 05.10.2025 இற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 200 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 150 | 200 | 200 |
| தக்காளி | 200 | 160 | 250 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 200 | 200 |
| கோவா | 250 | 180 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 200 | 350 | 230 | 250 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 80 |
| புடோல் | 100 | 150 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 150 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 140 | 180 |
| பாகற்காய் | 400 | 400 | 600 | 600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 170 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 180 | 200 |
| லீக்ஸ் | 250 | 180 | 250 | 170 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 120 | 100 | 100 |
| கறிமிளகாய் | 350 | 350 | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 150 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 170-230 | 160-240 |
| இராசவள்ளி | 800 | 600 | 1000 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 100 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 90 | 250 |

# சட்டரீதியாக வழங்கப்பட்ட இடத்தில் வியாபாரத்தினை மேற்கொள்ளுங்கள்

## பருத்தித்துறை நகரசபை தலைவர்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தை கட்டடத் தொகுதியில் நடைபாதையினை ஆக்கிரமித்து இடம்பெற்று வரும் வியாபார நடவடிக்கையினை நிறுத்துவதற்கு பருத்தித்துறை நகரசபை தலைவர் வி. டக்ளஸ் போல் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக நடைபாதை ஆக்கிரமிப்பு விடயம் தீர்க்கப்படாது இருந்துவரும் நிலையில் அண்மையில் நவீன கட்டடத் தொகுதிக்கு விஜயம் மேற்கொண்டு வியாபாரிகளுடன் கலந்துரையாடி ஒத்துழைப்பு வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நகரசபை செயலாளர் மற்றும் நகரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி சட்டரீதியாக வழங்கப்பட்ட இடத்திற்குள் வியாபார நடவடிக்கையினை முன்னெடுத்து ஒத்துழைப்பினை வழங்குமாறு நகர சபை தலைவரால் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தர்ம முழக்கம்' துடுப்பாட்டச் சமர் -2025






கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டு பலம் பொருந்திய பாடசாலைகளான கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கும் கிளி/தருமபுரம் மத்தியகல்லூரிக்கும் இடையில் வருடாவருடம் நடைபெற்று வருகின்ற "தர்ம முழக்கம்" என வர்ணிக் கப்படுகின்ற மாபெரும் துடுப்பாட்டச்சமரானது இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை (26,27.09.2025) ஆகிய இரு தினங்களும் கிளி/முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற காத்திருக்கின்றது.

(C-3954)

## 'ஆலம்விதை' கைக்கூ கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பொன்.சுகந்தனின் இருபது கவிதைத் தொகுதிகள் தொடராக வெளிவர வுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வும் முதலாவது நூலான ஆலம் விதை என்னும் கைக்கூ கவிதை நூலின் வெளியீடும் விஜயதசமி (02.10.2025) அன்று பி.ப.2.00 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கி.கந்த வேள் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள் வதோடு வெளியீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபரும் மூத்த கவிஞருமான சோ.பத்ம நாதன் நிகழ்த்தவுள்ளார். (8)

## கிளிநொச்சியில் அறுவடை விழா



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சி யான காலநிலைக்கு செய்கை மேற் கொள்ளக்கூடிய நெல் வர்க்கமாக BG377 (வெள்ளை) நெல் வர்க்கம் பரீட்சார்த்தமாக செய்கை மேற்கொள் ளப்பட்டு அதன் அறுவடை விழா புளியம் பொக்கணை பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

புளியம்பொக்கணை பகுதி விவசாய போதனாசிரியர் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் வி.சோதி லட்சுமி கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் கண்டாவளை கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், பாடவிதான உத்தி யோகத்தர் க.பிரதீபன், விவசாய போதனாசிரியர்கள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், பொது அமைப்பு சார்ந்தோர், அருகிலுள்ள பாடசாலை முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-316)

## யாழ்.வணிகர் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 20.09.2025 சனிக்கிழமை யாழ்.வணிகர்கழகப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

இதில் யாழ்.வணிகர்கழகத்தின் தலைவராக இ.ஜனக்குமார், உப தலைவராக இ.ஜெயராசா, செயலாளராக ச.சிவகுமரன், உபசெயலாளராக சு.சுதர்சன், பொருளாளராக ந.ஜெக மோகன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்ய ப்பட்டனர்.

அத்துடன் 16 நிர்வாக சபை உறுப்பி னர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் - விசாகப்பெருமாள் பாலகுமார் பெண் மலைமகள்
ஆதனப்பதிவேட்டின்படி பெயர் சொந்தக்காரர் உரிமை கோருபவர் மலைமகள்
ஆதன இல-1252, வீதி - பொன்னாலை பருத்தித்துறை வீதி, வட்டாரம்- 04

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத் திற்குட்பட்ட வட்டாரம்-04 பொன்னாலை பருத்தித்துறை வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. குறித்த ஆதனமானது **06/04/2019**ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு திரு.சிவலிங்கம் இளங்கீரன் அவர்கள் முகதாவில் இலக்கம் 10579 இல் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனமானது 1981ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ஆம் திகதி பாலகுமார் பெண் மலைமகள் ஆகியவர்களுக்கிடையே நிறைவேறிய திருமணம் காரணமாக, அவர்களின் 2ஆம் பேரின் பெற்றோர் வீரபாகு பஞ்சாட்சரமும் பெண் சிவபாக்கியமும் ஆகியவர்களால் சீதனமாக கையளிக்கப் பட்டதென்றும், இது குறித்து அவ்வேளையில் முறையான சீதன உறுதியும் நிறை வேற்றப்பட்டிருந்து, அவர்கள் வசம் இருந்ததென்றும், எனினும் கடந்தகாலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் அவர்கள் இடம்பெயர வேண்டிய தேவையிருந்ததாலும், அவ்வேளையில் குறித்த சீதன உறுதியும் வேறு சில ஆவணங்களும் கைதவறிவிட்ட தாலும், குறித்த சீதன உறுதியின் பிரதி ஒன்றைப் பெற யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தேடுதல்கள் பலமுறை மேற்கொண்டும், எவ்வித பலனும் கிடைக்காத நிலையில் அவர்கள் உரித்தை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற் பட்டுள்ளதனால் வெளிப்படுத்தல் உறுதி ஒன்றினை நிறை வேற்றியுள்ளார்.

**ஆதனடாப்பு**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலி-வடக்கு பிரதேசசபை, வலி-வடக்கு பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு **J/247**,தையிட்டி இறை "கறையான்காடு" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் V. தவராஜா அவர்களால் 23.01.2018ஆம் திகதியில் அளந்து வரைந்த 1312ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டிக்காட்டியபடி விஸ்தீரணம் நில.பர (2) இரண்டும், குளி (7.9) ஏழு தசம் ஒன்பதும், கிணறும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்,

**இதன் எல்லை :-**

கிழக்கு - பருத்தித்துறை வீதிக்கு செல்லும் ஒழுங்கை
வடக்கு- பருத்தித்துறை வீதி
மேற்கு - நடராஜா சோதிலிங்கத்தினதும் மறுபேர்களினதும் ஆதனம்
தெற்கு -S.K பரமேஸ்வரனின் ஆதனம், இதடங்கலும்,

மேற்குறித்த ஆதனம் விசாகப்பெருமாள் பாலகுமார் பெண் மலைமகள் என்பவருக்கு 10579 இல **06/04/2019** திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. விசாகப்பெருமாள் பாலகுமார் பெண் மலைமகள் என்பவர் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்கு ஆட்சேபனை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விசாகப்பெருமாள் பாலகுமார் பெண் மலைமகள் என்பவரின் பெயரிற்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும், இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(5513)

**சோ.சுகிர்தன், தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை,(கொல்லங்கலட்டி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கலைமாமணி விருது வழங்கும் நிகழ்வு
### தமிழ் திரையுலகினரின் பெயர்களும் உள்ளடக்கம்





(சென்னை)

2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருதுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதில் தமிழ் திரையுலகின் பலருக்கும் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைஞர்களை கௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதில், 2021ஆம் ஆண்டுக்கான விருதுகள் திரைத்துறை பிரிவில் எஸ்.ஜே.சூர்யா, சாய் பல்லவி, லிங்குசாமி, சண்டைப் பயிற்சியாளர் சூப்பர் சுப்பராயன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டுக்கான விருதுகள் திரைத்துறையில் நடிகர் விக்ரம் பிரபு, ஜெயா வி.சி.குகநாதன், பாடலாசிரியர் விவேகா, டைமண்ட் பாபு, டிலட் சுமி காந்தன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டுக்கான விருதுகளில் திரைத்துறையில் நடிகர்கள் மணிகண்டன், ஜார்ஜ் மரியான், இசையமைப்பாளர் அனிருத், பாடகி ஸ்வேதா மோகன், சாண்டி மாஸ்டர், நிகில் முருகன் ஆகியோருக்கு அறிவிக்கபபட்டுள்ளன.

அதேபோல் இசைப்பிரிவில் எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது பாடகர் கே.ஜே. யேசுதாஸுக்கு தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, சிறந்த கலை மன்றமாக சென்னை ராஜா அண்ணாமலை மன்றமும், சிறந்த நாடகக் குழுவமாக மதுரை எம்.ஆர். முத்துசாமி நினைவு நாடக மன்றமும் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. சின்னத்திரை நடிகர் பி.கே. கமலேஷ், நடிகை ஜெயா வி.சி. குகநாதன், மெட்டி ஒலி காயத்ரி ஆகியோருக்கும் கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் தங்கப்பதக்கம், விருது பட்டயம் வழங்கப்பட உள்ளதுடன் குறித்த விருது வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ளது. (நி)

## தாய்லாந்து வீதியில்
### திடீரென ஏற்பட்ட பாரிய பள்ளம்

(பாங்கொக்)

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் உள்ள வஜிரா மருத்துவமனைக்கு முன்னால் உள்ள வீதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை, 50 மீற்றர் ஆழம் கொண்ட ஒரு பெரிய பள்ளம் ஒன்று திடீரென ஏற்பட்டுள்ளது.

இந்த பள்ளம் தொடர்ந்து விரிவடைந்து, தற்போது சாம்சென் காவல் நிலையத்தின் முன்புறம் வரையிலும் பரவி வருகிறது.

இந்த பள்ளத்தின் ஆழம் 50 மீற்றருக்கும் அதிகமாக உள்ளதால், இது ஒரு பெரும் விபத்துக்கான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



இந்த விபத்துக் காரணமாக, துசித் மாவட்ட அலுவலகம், வஜிரா மருத்துவமனை - சாங் ஹி சந்தி மற்றும் அதைச் சுற்றியுள்ள வீதிகள் மூடப்பட்டுள்ளன.

இந்த திடீர் பள்ளம் உருவானதற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவம், அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (நி)

## அடையாளம் தெரியாத ட்ரோன்கள்
## மூடப்பட்ட டென்மார்க் விமான நிலையம்

(டென்மார்க்)

டென்மார்க்கின் பல விமான நிலையங்களில் அடையாளம் தெரியாத ட்ரோன்கள் தென்படுவதாக தகவல் வெளியானதை அடுத்து ஆல்போர்க் விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூன்று சிறிய விமான நிலையங்களில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை ட்ரோன்கள் தென்பட்டதாக, டேனிஷ் பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும் ஏனைய விமான நிலையங்கள் மூடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க்கின் முக்கிய விமான நிலையமான கோபன்ஹேகன் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த நிலையில், வணிக மற்றும் இராணுவ விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆல்போர்க் விமானநிலையமும் தற்போது மூடப்பட்டுள்ளது.

எஸ்டோனியன், போலந்து மற்றும் ருமேனிய வான்வெளியில் ட்ரோன்கள் மற்றும் விமானங்களுடன் தொடர்புடைய, அண்மைய சம்பவங்கள், ரஷ்யா நேட்டோ பாதுகாப்புகளை சோதித்து வருவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு வழிவகுத்தன.

இதன் பின்னணியில் உள்ளவர்களை விசாரித்து வருவதாகவும், இது ஒரு வேடிக்கையானது என்பதை நிராகரிக்க முடியவில்லை எனவும் டென்மார்க் பொலிஸ் தெரிவித்துள்ளது.

வடக்கு டென்மார்க்கில், ஜட்லாண்ட் பகுதியில் அமைந்துள்ள, மக்கள் தொகை அடிப்படையில் நாட்டின் நான்காவது பெரிய நகரமான ஆல்போர்க் விமான நிலையத்திற்கு அருகில் ஒன்றுக்கும் மேற்பட்ட ட்ரோன்கள் காணப்பட்டதாக பொலிஸ் அறிக்கை ஒன்றினூடாக தெரிவித்துள்ளது. (நி)



## 7 போர
## ஐ.நா ச
## ஐ.நா



ஐ.நாவின் 80ஆவது பொதுச் சபைக் கூட்டம், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கிறது. இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், கடந்த செவ்வாய் கிழமை பேசியதாவது:

கடந்த, ஏழு மாதங்களில், இந்தியா - பாகிஸ்தான் உட்பட ஏழு போர்களை நான் நிறுத்தியுள்ளேன். இதில் சில போர்கள் நீண்டகாலம் நடந்து வந்தன.

மேலும், அணு ஆயுதப் போர் ஏற்படும் அபாயமும் இருந்தது.

என்னுடைய தலையீட்டால், இந்த போர்கள் சுமுகமாக முடிவுக்கு வந்

## இந்தியா எங்கள்
## உக்ரைன் ஜனாதிப

(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி நேற்று முன்தினம் அளித்த பேட்டி ஒன்றில், இந்தியா பெரும்பாலும் தங்கள் பக்கமே இருப்பதாகவும், இந்தியாவை தங்கள் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ர்களை நான் நிறுத்தியுள்ளேன்; கடிதங்களை மட்டுமே எழுதுகிறது

## பொதுச்சபையில் ட்ரம்ப் பகிரங்கம்



**(நியூயோர்க்)** "கடந்த ஏழு மாதங்களில் மட்டும், இந்தியா - பாகிஸ்தான் உட்பட ஏழு போர்களை நான் நிறுத்தியுள்ளேன்" ஆனால், ஐ.நா வெறும் கடிதங்களை மட்டுமே எழுதிக்கொண்டிருக்கிறது என, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

துள்ளன. ஐ.நா செய்ய வேண்டியதை நான் செய்துள்ளேன். ஆனால், அதற்கான பாராட்டுகள் எனக்கு கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாவதை நான் தடுத்து நிறுத்தியுள்ளேன்.

இந்தப் போர்களை நிறுத்துவதற்கு எந்த முயற்சியும் எடுக்காத ஐ.நா எனக்கு எந்த உதவியும் செய்யவும் முன்வரவில்லை ஐ.நாவிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கூட எனக்கு வரவில்லை.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்துள்ள போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நான் மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டேன்.

ஆனால், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா, சீனா போன்றவை கச்சா எண்ணெய் வாங்குவதன் மூலம், இந்தப் போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இது போலவே, ஐரோப்பிய நாடுகளும், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றை வாங்கி வருகின்றன. இதனால், இந்தப் போரை நிறுத்த முடியவில்லை.

இதனால், ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்டவற்றுக்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்.

இதுபோலவே, மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசாவை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையேயான போரும் முடிவுக்கு வரவில்லை.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அறிவிப்பதன் வாயிலாக, ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு, உலக நாடுகள் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றன.

ஒரு பயங்கரவாத செயலை, இந்த நாடுகள் மறை முகமாக ஆதரிக்கின்றன.

அமெரிக்காவுக்கு தற்போது பொன்னான காலம் உருவாகியுள்ளது.

இதற்கு முக்கிய தடையாக இருந்தது, சட்ட விரோதமாக புலம் பெயர்ந்துள்ளோரே.அதனால்தான், இந்த விடயத்தில் மிகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறேன்.

அதற்காகவே, விசா கட்டுப்பாடுகளும் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஐரோப்பிய நாடுகளுக்கு இந்த விடயத்தில் எச்சரிக்கை விடுக்கிறேன். புலம் பெயர்ந்தோரைக் கட்டுப் படுத்தாவிட்டால், மிகப் பெரிய பாதிப்புகளை நீங்கள் சந்திக்க நேரிடும்.

கடந்த, 1776 ஜூலை 4ஆம் திகதி அமெரிக்கா சுதந்திரம் பெற்றது.

இதன், 250ஆவது ஆண்டு விழாவை, 2026 இல் கொண்டாட உள்ளோம்.

இந்த வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்க வரும்படி உலக நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன் என அவர் தெரிவித்தார். (நி)

## ா பக்கம் உள்ளது
## பதி ஜெலென்ஸ்கி

வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் போரில் சீனா ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவது போல இந்தியா ரஷ்யாவுக்கு ஆதரவாக இல்லை. மாறாக, இந்தியா பெரும்பாலும் எங்கள் பக்கமே உள்ளது என்று ஜெலென்ஸ்கி குறிப்பிட்டார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்கும் விவகாரத்தில் சில முரண்பாடுகள் இருந்தாலும், அவற்றைத் தங்களால் சமாளிக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகள் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த வேண்டும் என்றும், இந்தியாவைத் தங்கள் பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜெலென்ஸ்கி வலியுறுத்தினார்.

மூன்றாண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் இந்த போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று இந்தியா பலமுறை வலியுறுத்தியுள்ளது. "இந்த யுகம் போருக்கானது அல்ல. உலகின் அமைதி திரும்ப வேண்டும்" என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், உக்ரைன் ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடர் AB அணி 2 ஆவது சுற்றுக்குத் தகுதி

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடருக்கான 1 ஆவது சுற்றில் 3' ஆவது போட்டி கடந்த 13ஆம் திகதி அன்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் AB அணிக்கும் டிறைற்றேன் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப் போட்டியில் AB அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று AB அணி களத்தடுப்பை மேற்கொண்ட போது முதலில் துடுப்பெடுத்தாடிய டிறைற்றேன் அணி 29.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றனர். விஸாவரூபன் -19 டில்கோராஜ்-12 , கிருபாகரன்-37, கஜானன் -12 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் AB அணியைச் சார்ந்த லிங்கநாதன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும், ஞானானந்த சர்மா 5 ஓவர்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் மதன் 6 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

118 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய AB அணி 15.3 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றனர்.

சயந்தன்-43, மதன்-17, தனலக்ஸன் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களையும் கைப்பற்றினர். பந்து வீச்சில் டிறைற்றேன் அணியைச் சேர்ந்த உதய சாந்த் 5 ஓவர்களில் 28 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப் பற்றினார். (நி)

# 'தர்ம முழக்கம்' துடுப்பாட்டச்சமர்

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டு பலம் பொருந்திய பாடசாலைகளான கிளி/முழங்காவில் மகாவித்தியாலயத் திற்கும் கிளி/ தருமபுரம் மத்திய கல் லூரிக்கும் இடையில் வருடா வருடம் நடைபெற்று வருகின்ற "தர்ம முழக்கம்" என வர்ணிக்கப்படுகின்ற மாபெரும் துடுப்பாட்டச்சமரானது இன்றும் நாளை யும் கிளி/ முழங்காவில் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1982 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
2இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16012

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி-பா-27 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்-BA,MSc,Teacher
எதிர்பார்ப்பு: அரச / தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16013

பிறப்பு:1988-இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம்:5"
தகைமை/தொழில்:A/L,Hotel (pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16014

பிறப்பு: 1984-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
1இல்செவ்
கி-பா-41 3/4
உயரம்:5'10"
தகைமை/தொழில்: HND IT, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16015

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்-ரேவதி
2இல்செவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: BBM,Work(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16016

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
8இல்செவ்
கி-பா-23
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT
தொ.இ: G/16009

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
12இல்சூரிசெவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc, MSc, Health Research Assistant
எதிர்பார்ப்பு: வெளிநாடு(கனடா)
தொ.இ: G/16018

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்:5'5"
கி.பா:10
தகைமை/தொழில்:Msc Business and Management
எதிர்பார்ப்பு: லண்டனில் PR உள்ள மணமகன்
தொ.இ: G/14690

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்:மூலம்
12இல்சூரிசெவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - O/L, Beautician
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16024

பிறப்பு - 1997 - இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, MSc. விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - அரசதொழில்,வெளிநாடு
தொ.இ: G/16025

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 452



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நல்லவன் வாழ்வான்!

"நாட்டில் நல்லவர்கள் ஒருவர் இரண்டு பேர் இருக்கிறதினாலேதான்... மழையே பெய்கிறது!" என்று சொல்வது உண்டு. **"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை!"** சிலசமயம் ரொம்ப பேர் திடீர் என்று நல்லவர்களாக ஆகிடுவார்கள் போல இருக்கு அதுதான் விடாமல் பேய் மழையாக கொட்டி தீர்த்துவிடுகிறது. எல்லோரும் நல்லவர்களாக ஆகிவிட்டால் உலகமே தாங்காது போல இருக்கு!

அப்பப்ப ஒருவர் இரண்டு பேர் நல்லவர்களாக ஆகணும் அப்பத்தான் சீராக மழை பெய்யும். மாதத்துக்கு மூன்று பேர் நல்லவர்களாக ஆனால் மாதம் மும்மாரி பொழியும்! சரி இந்த வேடிக்கைப் பேச்செல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது விடயத்துக்கு வருவோம்!

ஒரு கும்பலிலே நல்லவன் யார் என்று எப்படி கண்டுபிடிக்கிறது? இதுக்கு ஒரு வேடிக்கை கதை ஒன்று உண்டு. என் நண்பர் ஒருவருக்கு அவர்களின் பாட்டியம்மா சொன்ன கதையாம் இது! நீங்கள் உங்கள் பாட்டியம்மாவுக்கு இந்தக் கதையைச் சொல்லலாம். அப்படி யாராவது இருந்தால்! அல்லது பார்ப்பதற்கு பாட்டியம்மா மாதிரி யாராவது உங்கள் வீட்டிலே இருந்தால் அவர்களிடம் சொல்லலாம்.

சரி.. அந்த கதை என்ன தெரியுமா?

கொஞ்சம் இப்படி உட்கார்ந்து காது கொடுத்து கேளுங்கள். சொல்கிறேன்! ஒரு ஊரிலே ஒரு சமயம் பலமான மழை பெய்ய ஆரம்பித்தது! இடி, மின்னல் ரொம்ப கடுமையாக இருந்தது.

ஆரம்பித்த மழை வரவர கடுமையாக ஆகிக்கொண்டிருந்ததே தவிர நிக்கின்ற பாடாகத் தெரியவில்லை!

ஊர் ஜனங்களெல்லாம் பார்த்தார்கள். இதுக்கு மேலேயும் வீட்டுக்குள்ளே இருந்தால் ஆபத்து என்பதை புரிந்து கொண்டார்கள். வீடு எல்லாம் இடிந்த விழுந்துடும் என்ற பயம்!

உடனே எல்லோரும் புறப்பட்டுப் போய் ஊருக்குப் பொதுவாக இருந்த ஒரு மண்டபத்திலே தங்கி விட்டார்கள். மின்னல் கடுமையாக இருந்தது. இடி எந்த நேரத்திலேயும் எப்ப விழலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கும்! நிலைமை!

அந்த மண்டபத்திலேயிருந்த ஜனங்கள் மனதுக்குள்ளே ஒரு பயம். நம் கூட்டத்திலே யாராவது ஒரு கெட்டவன் - பாவம் செய்தவன் இருந்தால் கூட, இடி இந்த மண்டபத்திலே விழுந்திடும் - அது எல்லோருக்கும் ஆபத்து! என்று நினைத்தார்கள்!

சரி இதுக்கு என்ன பண்ணலாம் என்று யோசித்தார்கள். அந்த கூட்டத்திலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு யோசனை சொன்னார்.

இதோ பாருங்கள். அதுக்கு ஒரு வழி இருக்கு. அதோ. எதிர்த்தாப்பிலே கொஞ்ச தூரத்திலே ஒரு உயரமான மரம் இருக்கு பாருங்கள். பொதுவாக இடி சுலபமாக விழறது அந்த மாதிரி உயரமான மரத்திலேதான்!

நம்மகூட்டத்திலே இருக்கின்றவர்கள். எல்லோரும் ஒவ்வொருத்தராக போய் அந்த மரத்தைத் தொட்டு விட்டு திரும்பி வந்துவிடணும். நம்மிலே பாவம் பண்ணினவன் யாரோ.. அவன் அந்த மரத்தைத் தொடுகிற சமயம் இடி விழுந்துவிடும். அவன் மட்டும் போய் விடுவான். மண்டபத்திலே இருக்கின்ற நாமெல்லாம் பிழைத்துக்கொள்ளலாம்! என்று "யோசனை" கொடுத்தார் அந்தப் பெரியவர். இது நல்ல யோசனையாக பட்டது! எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள்.

ஒவ்வொருத்தராக போய் அந்த மரத்தைத் தொட்டுவிட்டு திரும்பி வந்தார்கள். இடி எதுவும் விழவில்லை! இன்னமும் பாவம் பண்ணிய ஆசாமி அதைப்போய் தொடலே போல இருக்கு. எல்லாரும் போய் தொட்டுவிட்டு வந்தார்கள்.

இன்னும் ஒரே ஆசாமிதான் பாக்கி. கடைசியாக இருந்த அந்த ஆள் பயந்துவிட்டான். இதுவரைக்கும் இடி விழலேன்னா.. என்ன அர்த்தம்?

"நாம்தான் பாக்கி.. நாம்தான் தப்பு செய்த நபர் போல இருக்கு என்று நினைத்துவிட்டான் அவன்.

சும்மா அதனாலே துணிச்சலாக போய் தொடுவதற்குப் பயம்தான். தயங்கிக்கொண்டே இருந்தான்! இருந்தாலும் மற்றவர்களெல்லாம் இருப்பார்களா? கட்டாயப்படுத்தி - கழுத்தைப் பிடித்து தள்ளாத குறையாக அவனைத்தள்ளிவிட்டார்கள். அவன் நடுங்கிகொண்டேபோய் அந்த மரத்தைத் தொட்டான். அதே வினாடி... ஒரு பயங்கரமான மின்னல் இடி! இடி விழுந்துவிட்டுது. அந்த ஆள்மேலே இல்லை! மண்டபத்திலே! இருந்தவர்கள் பூறா காலி! மண்டபத்திலே அந்த ஒரு ஆள் மட்டும் பிழைத்துக்கொண்டான். இந்த ஒரு ஆளைக் காப்பாத்துவதற்குத்தான் இடி மண்டபத்திலே விழாமே இருந்திருக்கு! இதுதான் கதை.. அதனாலே நல்லவர்கள் எப்படியும் தப்பித்துக்கொள்வார்கள் சார்!

ஒருவன் அப்படித்தான் தெருவிலே நடந்து போய்க்கொண்டிருந்தான். ரொம்ப நல்லவன். எதிரிலே ஒருவன் சைக்கிளிலே வந்துகொண்டிருந்தான். அதிலே மோதி இவன் கீழே விழுந்துவிட்டான். சைக்கிள்காரன் உடனே இறங்கி இவனை தூக்கி விட்டான்! இவன் எழுந்திரித்து அவனை முறைத்துப் பார்த்தான்.

"அப்படி பார்க்காதீர்கள் சார்! நீங்கள் ரொம்பவும் புண்ணியம் பண்ணியிருக்கீறீர்கள். அதுதான் இப்ப வந்து சைக்கிளிலே மோதிக்கொண்டீர்கள்!"

"என்ன அப்படி சொல்றீயே!" என்றான்.

"பத்து நிமிடத்துக்கு முன்னாடி நான் லொறி ஓட்டினேன். அப்போது எதிரிலே வந்திருந்தீர்கள் என்றால் என்ன ஆவது?" என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவுதலை கட்டுப்படுத்தல்; யாழ்.வணிகர் கழகத்தின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 12.09.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் யாழ்ப்பாண நகர்ப்புறப் பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக காணப்படும் கழிவுநீர், வெள்ளநீர் வாய்க்கால்களில் அடைப்பினை ஏற்படுத்தும் வகையில் நீர் தேங்கும் கொள்கலன்கள், பொலித்தீன்கள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் போடப்படுவதனால் நீரோட்டம் தடைப்பட்டு டெங்கு நுளம்புகள் பரவும் அபாயநிலை காணப்படுவதாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இவ் விடயம் தொடர்பில் அனைத்து வர்த்தகர்களும் தங்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக தங்களின் வர்த்தக நிலையங்களிற்கு முன்பாகவும் உட்புறம் மற்றும் வெளிப்புறங்களில் இருந்தும் கழிவுப் பொருட்களை உரிய முறையில் சேகரித்து அகற்றுவதற்கு உதவுவதுடன் தங்களது எல்லைக்குள் நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அவற்றை சுத்தப்படுத்தி டெங்கு பரவாது அதனை கட்டுப்படுத்த உதவுமாறு தங்களை கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். வணிகர்கழக செயலாளர் ச.சிவகுமரன் அறிவித்துள்ளார். (8)

# தாய்மை

தாயிற் சிறந்த தொரு கோயில் இல்லை என்பது முதுமொழி. தாய் என்ற சொல் "யாய்" என்றே முன்னர் வழங்கப்பட்டது. தமிழின் தொன்மை இலக்கியமான குறுந்தொகையில் யாயும் ஞாயும் யாராகியரோ என வரும் தொடர் இதற்குச் சான்றாக உள்ளது.

இத் தொடரில் யாய் "என்பது உன்னுடைய தாய் எனவும் "ஞாய்" என்பது என்னுடைய தாய் எனவும் பொருள் நிலையில் சுட்டப்பட்டுள்ளது. "தாய் சொல்லைத் தட்டாதே" எனவும் ஒரு பழமொழி வழக்கிலுண்டு. இத்தகைய அறிவுரைகள் தாய்மையின் தனித்துவத்தை நன்கு விளக்குவனவாக உள்ளன.

"தாய்மை" என்ற குணப் பண்பு சிறப்பாகப் பெண்ணுக்கு உரியதென வரையறை செய்யப்பட்டுள்ளது. ஒரு கருவை வயிற்றிலே சுமந்து வளர்க்கும் பொறுப்பை ஏற்ற பெண் அக் குழந்தையை ஈன்ற பின்னர் தாய் என்ற சிறப்பான பெயரைப் பெறுகிறாள். "ஈன்ற தாய்" என்றும் அவள் அழைக்கப்பட்டாள்.

பெற்றெடுத்த குழந்தையை பின்னர் வேறொரு பெண் வளர்க்கும் நிலை ஏற்பட்ட போது அப்பெண்ணுக்குச் "செவிலித்தாய்" என்ற பெயர் வழங்கப்பட்டது. "செவிலி" என்பது செவியை எப்போதும் திறந்து வைத்திருப்பவள் எனப் பொருள்படும். குழந்தையின் குரலுக்காகக் காதைக் கூர்மையாக்கிக் காத்திருப்பவள் அத்தாய்.

எனவே தாய்மை என்பது இருநிலையிலேயே பேணப்பட்டதை உணரமுடிகிறது. பெண் உடலமைப்பில் கருவறையின் செயற்பாட்டில் தாய்மை பேணப்பட்டது. அத்துடன் குழந்தை வளர்ப்பு என்ற நிலையிலும் தாய்மை சிறப்பிக்கப்பட்டது. குழந்தையின் வளர்ச்சி பற்றிய நுட்பமான விடயங்கள் தாய்மையின் சிறப்பான அறிவாகக் கருதப்பட்டுள்ளன.

தாயின் பாலூட்டல் குழந்தையின் வளர்ச்சியில் சிறப்பாகக் கணிக்கப்பட்டது. முழுமையான உணவாகத் தாய்ப்பால் விளங்கியதால் அதுவும் தாய்மையின் தனித்துவமாகப் பேணப்பட்டது. பண்டைய தமிழிலக்கியங்களிலே "முலைத்தாயர்" என்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளமை இதற்குச் சான்றாக உள்ளது. "வலிமை சேர்ப்பது தாயின் முலைப்பால்" எனக் கவிஞரும் குறிப்பிட்டுள்ளனர்.

மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்ற ஏனைய உயிரினங்களும் தாய்மைப்பணியைச் செய்து கொண்டிருக்கின்றன. அதனால் அவற்றின் பெயரோடும் "தாய்" அடைமொழியாக இணைந்துள்ளது. தாய்ப் பறவை, தாய்ச்சிங்கம் போன்றவற்றை எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஏனைய உயிரினங்களும் தமது குட்டிகளை உணவூட்டிப் பாதுகாத்து பல செயற்பாடுகளைப்பயிற்றி வளர்க்கின்றன.

காகம் தன்குஞ்சுக்கு இரையூட்டும் போது தாயொருத்தி தன் குழந்தைக்குச் சோறூட்டுவது போலவே இருக்கும். இத்தாய் சேய் உறவு எல்லா உறவுகளிலும் மிகச் சிறந்தது.

தாய்மைக்குரிய இன்னொரு சிறப்பியல்பு தன் குழந்தைக்கான தொடர்பாடல் மொழியைப் பயிற்றுவதாகும். அவள் கொடுக்கின்ற மொழிப்பயிற்சி குழந்தைக்குத் தனது தொடர்பாளர்களை அறிமுகம் செய்கிறது. குறிப்பாகக் குழந்தையின் தந்தையைத் தாயே அறிமுகம் செய்து வைக்கிறாள். அவள் பயிற்றுகின்ற மொழி "தாய் மொழி" எனச் சிறப்பாக அழைக்கப்பட்டது.

அதன் பின்னர் குழந்தை கற்கின்ற ஏனைய மொழிகள் எல்லாமே பிறமொழிகள் என்று அழைக்கப்பட்டன. தாய் மொழியை ஒருவர் சிறப்பாகப் பயின்றால் பிறமொழிகளை எளிதாகக் கற்கலாம். தாய் மொழியில் எண்ணக் கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்தலாம்.

இத்தாய்மையின் சிறப்பு மொழியோடு மட்டும் நின்றுவிடாமல் வாழும் நாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. "தாய்நாடு" எனப் பிறந்த நாடு பெருமையுடன் அழைக்கப்படுகிறது. பாரம்பரியமாக ஒருவர் வாழும் நாடு தாய்நாடாகும். அவர் செல்லுகின்ற ஏனைய நாடுகள் பிறநாடுகள் என அழைக்கப்பட்டன.

தாயும் சேயும் என்ற தொடர் இத் தாய்மையின் இயல்பை விளக்கி நிற்கிறது. ஒரு பிரிக்க முடியாத உறவாகத் தாய் சேய் உறவு விளங்குகிறது. அம்மா, அன்னை, மாதா என்ற சொற்களும் "தாய்" என்ற உறவை விளக்கப் பயன்படும் சொற்களாகும்.

இன்னும் தாய்மைக் குணம் சிறப்பாகப் பெண்ணுக்குப் பொருந்துவதாக இருப்பினும் எல்லோரும் தாயன்பைக் காட்டலாம். அந்த அன்புதான் எல்லோரையும் பண்புடையவராக மாற்றும். இறையன்பைத் தாயன்போடு ஒத்தது என்பர்.

தாய் தன்னுடைய குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்று அதற்காகத் தன்னுடைய முழு ஆற்றலையும் செலவிடுகிறாள்.

அவளுடைய குண வியல்பு எல்லோருக்கும் அமைய வேண்டும். அதுவே வையகத்தை அமைதியாக வாழவைக்கும் என்பதில் ஐயமில்லை.

வெள்ளி நற்சிந்தனை 06



முனைவர் ச.மனோன்மணி

# நவராத்திரி விழா திருக்கோயில்களில் தேவி பாராயணம் ஓதியும் இல்லங்களிலும் வழிபடுவோம்

**அபிராமிப்பட்டரது 41 ஆவது அந்தாதியில் தேவியின் திருவிழிகளால் அஷ்ட ஐஸ்வர்யங்கள் எனும் எண் வகைச் செல்வங்கள் எய்துவதுடன், புண்ணியஞ் செய்தனமே! மனமே! அந்தாதி 101 பாடல்களும் ஓதுவோம்.**

**புண்ணியஞ் செய்தன மே மனமே புதுப் பூங்குவளைக்**
**கண்ணியுஞ் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்**
**நண்ணியிங் கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்**
**பண்ணி நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடவே!**

நாம் ஆலயம் சென்று அங்கு அம்பிகையின் ஆராதனையில் பங்கு கொண்டு, திருமுறைகளையும் ஓதி அபிராமி அந்தாதியும் ஓதியும், தேவியை மனத்தில் இருத்தி அசைவின்றி ஒரே சிந்தனையில் இருந்து வழிபட வேணும்.

புதிய குவளை (நீலோற்பலம்) மலரைப் போன்ற கண்களையுடைய அன்னையும், சிவந்த நிறமுடைய சிவபெருமானும் இணைந்து வந்து அருட் செய்யும் கருணையுடன், நமக்காக இப் பூவுலகில் எழுந்தருளி இருக்கவும் செய்தனர்.

இவ்வாறு நம் மாணிக்கவாசகர் தனது கோயில் மூத்த திருவாசகத்தில்- பாட்டு எண் 376- தினம் ஓதுவோம்.

**உடையான் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவில் நீ இருத்தி,**
**அடியேன் நடுவில் இருவீரும் இருப்பதனால் அடியேன் உன் அடியார் நடுவில் இருக்கும் அருளைப் புரிவாய் பொன் அம்பலத்து எம்**
**முடியா முதலே! என் கருத்து முடியும் வண்ணம் முன்நின்றே**

நாம் அடியார் நடுவில் இருந்து மனம். இறைவனிடம் அன்புடன் மனம் அலையாமல் வணங்க வேணும்.அப்போது நம்முடன் அருட்செய்கையால் இங்கு " பண்ணி நம் சென்னியின் மேல் பத்ம பாதம் பதித்திடலே" ஏமனமே! மேற்கண்ட செயல்களை அபிராமிப்பட்டர் நம் பொருட்டு செய்த புண்ணியத்தாலே ஆகும்.

10 நாள்- நவராத்திரி 11 ஆம் நாள் விஜயதசமி துர்க்கா வழிபாடு செவ்வாயும், மகாலட்சுமி வழிபாடு ள்ளியும்- சரஸ்வதி- அறிவு- புதன் வருவது ஓர் சிறப்பு-11 ஆம் நாள் வியாழன் குரு வழிபாடு அன்று விஜயதசமி வருவதும், ஓர் தனிச்சிறப்பு இறைவி அம்பாளை மனம் உருகி கசிந்து தேவி, பாராயணம் செய்து வழிபடுவோம்.

இந்த நவராத்திரி இரவுகள் ஓர் அருள் திரு புண்ணிய காலமாகும். இவ் விழா சக்தி பேதங்கள் பலவற்றுக்கும் சிறந்தனவாகக் கருதப்படும்.

முதல் மூன்று நாளும் துர்க்கா வழிபட்டு வெற்றியும், நடு மூன்று நாளும் திருமகள் வழிபட்டு செல்வமும், இறுதி மூன்று நாளும் சரஸ்வதியை வழிபட்டு கல்வி அறிவும் இம்முறை பத்து நாளாகவும் ஓர் சிறப்புடன் விழாச் செய்து தேவியை நோன்பாக, மனத்தில் இருத்தி அசைவின்றி மனதை அலையவிடாமல் திருமுறைகளையும், அபிராமி அந்தாதியும் ஓதி வழிபட்டு உய்வோம்.

மனதில் சஞ்சலபுத்தி ஆகியவற்றை நீக்கி நமக்கும் ஒரு வழிப்பட்ட மனதையும் நல்லறிவையும் அம்பிகை அருள்வாள் பக்தர்களை அழிக்க நினைப்பவன் தீங்கு செய்பவர்களை மானமிழந்து அழியச் செய்துவிடுவாள், மாங்கல்ய தோஷத்தை நிவர்த்தி செய்து ராகு, கேது தோஷங்களையும் அம்பிகையின் அருட் சக்தி நீக்கி காக்கின்றது. அம்பிகை தன் திருக்கடைக்கண் வீச்சினாலேயே அனைத்து நோய்களையும் நீக்கி பக்தர்கள் அனைத்து இன்பங்களையும் துய்க்குமாறு அருள்கிறாள்.

துர்க்கா, இலட்சுமி, சரஸ்வதி நவ ராத்திரி நோன்பை நோற்று பெறுதற்கரிய பேறுகளைப் பெற்று மானம்பூ, விஜயதசமி விழா மலநீக்கமடைந்த உயிர்கள் வீடுபேறடைவோம் இங்கு மாநோன்பு என்பது நாளடைவில் மருவி " மானம்பு" ஆயிற்று எனவும் கூறுவர்.

மகிடாசுரன் வரலாறு அசுரன் தோன்றி மகிடபுரி என்னும் நகரையமைத்து அரசு செய்து அவனின் கொடுமை நீங்க மும்மூர்த்தியும் தேவர்களும் வழிபட்டு நவமி மறுதினம் தசமியாகிய விஜயதசமி 02.10.2025 கார்மேகம் போன்ற மகிடாசுரனைக் கொன்று வருந்திய தேவர்களின் துன்பத்தைப் போக்கினாள்.அம்மையார் துர்க்கையாகி மகிடனைக் கொன்றது உயர் திருவருளினால் மல நீக்கமடைதலாகும். விஜயதசமி விழா தரிசிப்போம் மலநீக்கமடைந்து திருமுறை அம்பாள் தோத்திரம் பாடி வீடுபேறு அடையப் பிரார்த்திப்போம்.

உலகப் பற்றினைக் குறைத்து இறைபற்றுடன் திருமுறை ஓதி வழிபட உடன் நம்மை நோக்கி வந்து அருள் புரிவாள்.

ஆலயத்தில் பிற சிந்தனை, பிறவார்த்தைகள் நீக்கி அருளார்கள் முன்னோர் காட்டிய வழியில் திருமுறை நாமம் ஓதி வழிபட கற்பகக் கிரகத்தில் அருள் மிகு இறை விக்கிரகங்கள் செவி சாய்த்து அருள் புரிந்து இடர்கள், துன்பங்கள், பிறவிப் பிணி நீக்கி மகா பேரருளுடன் முத்தியும் கிடைக்கும்.



இறைவன்- அன்பு- வழிபாட்டில் ஓதும் தொண்டன்
க.கு.க.சிவபாலன் (k.k.k)
(C-3953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி வேண்டும்

## யாழில் உண்ணாவிரதப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)........................

**வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.**



குறித்த போராட்டம் யாழ் செம்மணி பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# போதனாசிரியர்களிற்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பின்வரும் கற்கை நெறிகளிற்கான போதனாசிரியர்கள் (நாளாந்த அடிப்படை) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர் (ICT Technician), கணணி படவடி வமைப்பாளர் (Computer Graphic Desinger), அலுமினியம் பொருத்துநர் (Aluminium Fabricator), முதியோர் பராமரிப்பாளர் (Elder Care Giver), பொது பராமரிப்பாளர் (Genreal Care Giver)

கல்வித்தகைமை க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல்

தொழில்சார் தகைமை- மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் NVQ-4 உடன் NVQ-5 அல்லது அதற்குமேல் தொழில் தகைமை சான்றிதழ் உடன் 1 வருடம் கற்பித்தல் அனுபவம்.

அனுபவம் - சம்பந்தப்பட்ட துறையில் ஒருவருடத்திற்கு மேலான தொழிற்றுறை அனுபவம்

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை மற்றும் கல்வி. தொழிற்கல்வி, அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 30.09. 2025 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை. 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல. 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் அல்லது நேரில் சமர்பிக்கவும்.

மேலதிக விபரங்களிற்கு 021 222 7949 / 071 031 8737 இற்கு தொடர்பு கொள்ளுமாறு பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (8)

# விளம்பரங்களைக் காட்சிப்படுத்த பொது இடங்கள் அறிமுகம்

(அராலி)

தனியார் நிறுவனங்களின் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், கோவில்களின் விஞ்ஞாபனங்கள் மற்றும் பொது அறிவித்தல்கள் என்பன மக்களது வீடுகளின் மதில் சுவர்கள், பாடசாலைகளின் மதில் சுவர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் மதில் சுவர்களிலும் ஒட்டப்படுகின்றன. இவ்வாறு விளம்பரங்கள் ஒட்டப்படும் பகுதிகள் அழுக்காகின்றது மட்டுமல்லாமல் அது விசனத்துக்கும் உள்ளாகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

இந் நிலைமையினை தடுக்கும் நோக்கில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 7 பொது இடங்களில் குறித்த விளம்பரங்களை காட்சிப்படுத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அந்தவகையில், சுழிபுரம் சந்தி, வழக்கம்பரை அம்மன் கோவில் அருகாமை, சித்தங்கேணி சந்தி, சங்கரத்தை சந்தி அருகாமை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலகத்துக்கு அருகாமை, அராலி ஐயனார் கோவில் அருகாமை போன்ற இடங்களில் இவ்வாறான விளம்பரங்களை காட்சிப்படுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (8-104)


**University of Jaffna, Sri lanka**
**Faculty of Graduate Studies**

**New Admission**

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for the following postgraduate programme

Master of Science in Health Management-(Batch IV)
(2 years) [Sri Lankan Qualification Framework (SLQF) Level 10]

Please visit our website (www.grad.jfn.ac.lk) for more details regarding the required qualifications and fees.
Closing date of the applications: - 25.10.2025
Contact us on 0212223608 for any clarifications.

Registrar (C-3959)



**வேலணை பிரதேச சபை**
**ஆதன மதிப்பீட்டு ஏடு காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்**

1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 வது மற்றும் 141(3) வது பிரிவுகளின் கீழ் பிரதேசசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வேலணை பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள வேலணை தெற்கு வட்டாரத்திற்கான அனைத்து வதிவிட, வர்த்தக கட்டடங்கள், காணிகள், வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பை பதிவு செய்துள்ள மதிப்பீட்டு ஏடானது 22.09.2025 ஆம் திகதி தொடக்கம் 21.10.2025 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 8:30 மணி தொடக்கம் பி.ப 4:00 மணி வரையான காலப்பகுதியில் வேலணை பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

குறித்த ஆதனங்களின் வருடாந்த மதிப்பீடு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் குறித்த கால எல்லைக்குள் "தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது அலுவலக நாட்களில் மு.ப 8:30 மணி தொடக்கம் பி.ப 4:00 மணி வரையிலான காலத்தினுள் நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என்பதனையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) உப பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் ஆதனங்களின் வருடாந்த மதிப்பின் பிரகாரமும் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வேலணை தெற்கு வட்டாரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையாச்சொத்தின் ஆண்டுப்பெறுமதியில் 5% இனை வருடாந்த வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வட்டார ஆதனங்களின் மதிப்பீட்டு ஏட்டில் வருடாந்த மதிப்பீடு தொடர்பான விபரங்களை பார்வையிடுவதற்கு காணியின் உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான குடியிருப்பாளருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்பதனை விசேடமாக தெரிவிப்பதுடன் மதிப்பீட்டு பதிவேட்டை பார்வையிடுவதற்காக வருவோர் தத்தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகவும் கருதப்படுகிறது. மேலும் ஆதனவரி அறவீடு தொடர்பான மேலதிக தகவல்களை வேலணை தலைமையலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ளமுடியும்.

குறிப்பு:- வேலணை தெற்கு வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான உறுதி, 30வருட தோம்பு, மற்றும் நிலஅளவைப்படம், அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை வேலணை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் எதிர்வரும் 21.10.2025 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**திரு.சிவலிங்கம் அசோக்குமார்,**
**தவிசாளர்,வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**

(C-5957)

**தொடர்புகளுக்கு 021 221 0180**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் மிகப்பெரிய குற்றம் நம்பிக்கைத் துரோகம்
மிகச் சிறந்த தண்டனை மௌனம். - அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் புத்திஜீவிகள் மௌனம் காப்பது ஏன்?

காற்றாலைக்கு எதிராக மன்னாரில் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எனினும் காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்தாமல் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

காற்றாலையால் பாதிப்பு ஏற்படும் என ஒரு தரப்புக் கூறுகிறது. அதேநேரம் காற்றாலையால் எந்தப் பாதிப்பும் இல்லை என இன்னொரு சாரார் கருத்துரைக்கின்றனர்.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது யாழ்ப்பாணத்தில் தனங்கிளப்பு தொடக்கம் ஆனையிறவு ஈறாக காற்றாலைகள் அமைக்கப்பட்டபோது, அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை எனக் கூறப்பட்டது.

அவ்வாறு எந்தப் பாதிப்பும் இல்லை எனக் கூறப்பட்டபோது, காற்றாலையால் முகில் கூட்டம் கலைந்து மழை பெய்கின்ற வாய்ப்பு இல்லாமல் போகும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதாயினும் அது வெறும் கற்பனை அவ்வாறு எதுவும் நடக்காது எனப் புத்திஜீவிகள் அப்போது கூறினர்.

அதன் காரணமாக யாழ்.குடாநாட்டில் காற்றாலைத் திட்டம் எந்தவித சலசலப்புமின்றி நிறைவேறியது.

ஆனால் மன்னாரில் காற்றாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. தவிர தொடர் போராட்டமும் இடம்பெறுகிறது. அவ்வாறு போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் காற்றாலையால் மழை இல்லாமல் போவதற்கு வாய்ப்பு உண்டு எனக் கூறுவதுடன் பறவைகள் மற்றும் இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்கின்றனர்.

எனினும் இது தொடர்பில் எங்கள் துறை சார்ந்த புத்திஜீவிகள் எந்தக் கருத்தையும் முன்வைக்காமல் மௌனம் சாதிக்கின்றனர்.

இவ்வாறு அவர்கள் மௌனம் சாதிப்பது ஏன்? என்பதுதான் புரியவில்லை.

பொதுவில் எதிர்ப்புத் தொடங்கிவிட்டால், அதற்கு மாறாகக் கருத்துரைப்பது தங்களுக்கு அவலத்தை ஏற்படுத்தும் என நினைத்து ஒதுங்கிக் கொள்கின்ற நடைமுறை நம் தமிழ்ப் புத்திஜீவிகளிடம் உண்டு.

ஆனால் இவ்வாறு ஒதுங்கிக் கொள்வதென்பது அறிவுடைமை ஆகாது. அறிவுடையவர்கள் எப்போதும் துணிந்து அறிவியல் கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

உண்மையில் காற்றாலையால் எந்தத் தீங்கும் இல்லை எனில், அதனை அமுல்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை.

அதேநேரம் காற்றாலை அந்தப் பகுதி மக்களுக்கு தீங்காக அமையும். அதனால் பாதிப்பு ஏற்படும் என்றால், அதனைத் தடுத்து நிறுத்துவது கட்டாயமானது.

எனினும் இவற்றை ஊகங்களின் அடிப்படையில் செய்ய முடியாது. மாறாக, விஞ்ஞான ரீதியான விளக்கங்களின் அடிப்படையிலும் காற்றாலைகள் உள்ள இடங்களில் பெற்ற பட்டறிவின் அடிப்படையிலும் இது தீர்மானிக்கப்பட வேண்டும்.

இதேவேளை மன்னாரில் காற்றாலையை எதிர்ப்பதற்குப் பின்னணி உண்டு என்றும் உள்நோக்கம் கருதி ஒரு தரப்பினர் அதனைச் செய்கின்றனர் என்ற கருத்தும் பரவலாக மேலெழுந்துள்ளமையால், இது தொடர்பில் எங்கள் புத்திஜீவிகள் மௌனம் கலைந்து திருவாய் மலர்ந்தருள வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை.

## பாதாளக் குழுக்களைத் தோற்றுவித்ததும் போதைப்பொருள் வர்த்தகத்தை முன்னெடுத்ததும் மொட்டுக் கட்சியினரே

### அமைச்சர் ஆனந்த விஜேபால பகிரங்கம்

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவில்லாமல் எமது அரசாங்கம் யாரையும் கைது செய்ததில்லை. பாதாளக் குழுக்களைப் போஷித்து அதன் மூலம் நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவந்து விநியோகிப்பவர்கள் மொட்டு கட்சியில் இருப்பவர்களே என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (25) இடம்பெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது நாமல் எம்.பி உரையாற்றிக் கொண்டிருக்கையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது நாமல் எம்.பிக்கும் ஆனந்த விஜேபால அமைச்சருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றுவந்தது.

அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நீதிமன்ற உத்தரவின்றிப் பொலிஸார் இராணுவத்தினர் என யாரையும் எமது அரசாங்கம் கைது செய்ததில்லை.

அதனால் இராணுவ வீரர்களைக் கைது செய்திருப்பதாக நாமல் எம்.பி தெரிவித்த விடயத்தில் எந்த உண்மையும் இல்லை.

முன்னாள் கடற்படைத் தளபதி, அவர் புலனாய்வுப் பிரிவில் இருக்கும்போது செய்த ஒரு நடவடிக்கை காரணமாக, நீதிமன்ற உத்தரவின் பேரிலே அவர் கைது செய்யப்பட்டார்.

அதேபோன்று கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் வரும் முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

போதைப்பொருளுடன் எமது அரசாங்கத்தை தொடர்புபடுத்த நாமல் எம்.பி முயற்சித்தார்.

ஆனால் போதைப் பொருளுடன் பொதுஜன பெரமுனக் கட்சி உறுப்பினர் மனம்பேரி தொடர்புபட்டவர் என யாரும் அறிந்த விடயம். அவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் இணைப்புச் செயலாளர். அதனால் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட பலர் மொட்டுக் கட்சியில் இருக்கின்றனர்.

நாட்டுக்குள் போதைப் பொருள் யார் கொண்டு வருகிறார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

அதனால் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மற்றவர்களின் மீது சுமத்தவே தற்போது இவர்கள் முயற்சிக்கின்றனர்.

இவர்களின் இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு நாட்டு மக்கள் ஏமாறப் போவதில்லை.

இந்த நாட்டில் பாதாளக்குழுக்களைப் போஷித்து அதன்மூலம்போதைப்பொருளை நாட்டுக்கு கொண்டுவந்து, விநியோகித்து வந்தவர்களை மக்கள் துரத்தியடித்த பின்னர் தற்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எம்மை விமர்சித்து வருகின்றனர் என்றார். (ம-7)

## ரணிலை சிறையிட்டால் பதவி உயர்வு அமைச்சருக்கு சிறை எனில் இடமாற்றம்

### அரசின் போக்கு குறித்து எதிரணி காட்டம்

நாட்டில் சட்டத்தின் ஆட்சி தற்போது கேள்விக் குறியாகியுள்ளது எனப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தண்டனைச் சட்டக்கோவை திருத்தச்சட்ட மூலம் மீதான விவாதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர் ,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மாவட்ட நீதவானுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரைக் கைது செய்ய உத்தரவிட்ட நீதவானுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஜே.வி.பி.யின் காட்டு நீதிமன்றச் செயற்பாடுகளை நாங்கள் அறிவோம்.

இந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்தவா? இப்போது முயற்சிக்கின்றார்கள் எனவும் கேள்வி எழுப்பினார். (ம-7)

## தாளையடி கடற்பகுதிக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம்

அதிகளவான காற்று வீசுவதால் வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்பகுதிக்கு வரும் சுற்றுலாவாசிகள் கடலுக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைப் பகுதிக்கு அதிகளவான சுற்றுலாவாசிகள் நாளாந்தம் வருகை தந்து பொழுதைக் கழிப்பதுடன், நீர் விளையாட்டுக்களிலும் ஈடுபடுகின்றமை வழமை.

ஆனால் தற்போது வடமராட்சி கிழக்குக் கடற்பகுதிகளில் அதிகளவான காற்று வீசுவதால் கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது.

ஆகவே தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலாவாசிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு யாரும் கடற்கரைக்குள் இறங்க வேண்டாம் என அப்பகுதி மீனவர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு தாளையடி கடற்கரைக்கு வருகை தந்த சுற்றுலாவாசி ஒருவர் கடலில் நீராடும் போது உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய அவர்,

ஜகத் விக்ரமரத்ன சபாநாயகர் பதவி வகிக்கத் தகுதியற்றவர். பிரதி அமைச்சர் அருண ஜயசேகர மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை காரணமின்றி நிராகரித்துள்ளார்.

இவ்வாறு நடப்பது பாராளுமன்ற ஜனநாயகத்தையும் பொறுப்புத் தன்மையையும் பாதிக்கிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக ஆகியோரும் சபாநாயகரின் நடத்தை குறித்து அதிருப்தி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுஷவுக்கு அழைப்பாணை

முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இன்று வெள்ளிக்கிழமை (26) காலை 9.30 மணிக்கு முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்பியது தொடர்பாக வாக்குமூலம் பெறும்பொருட்டு அவர் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முல்லைத்தீவைச் ...

அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதியின் தலாவ - மீரிகம சந்திக்கு அருகிலுள்ள மொரகொடப் பகுதியில் நேற்று அதிகாலை 04.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் இருந்து பயணித்த வான் ஒன்று லொறியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் முல்லைத்தீவு, செம்மலைப் பகுதியைச் சேர்ந்த தி.விமலானந்தன் (வயது -38), புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் பகுதியைச் சேர்ந்த சசிகுமார் (வயது-31), 10ம் வட்டாரம் புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த நிஷாந்த் (வயது-25) மற்றும் 9ம் வட்டாரம் மல்லிகைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த ந.தேனுயன் (வயது-25) என்ற 4 இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மேலும் விபத்தில் படுகாயமடைந்த 3 பேர் சிகிச்சைக்காக தலாவ மற்றும் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,299)

## முப்படை...

ஜகத் விக்ரமரத்ன நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 27, 2025 முதல் அமுலுக்கு வரும் இந்த உத்தரவு பாதுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 12ன் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் உருவாக்கப்பட்டது.

இருப்பினும் ஜனாதிபதி ஒரு அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் பொதுப் பாதுகாப்பைப் பராமரிக்க முப்படைகளையும் அழைக்கும் நடைமுறை அடுத்தடுத்த அரசாங்கங்களால் மீண்டும் மீண்டும் செய்யப்படும் நடைமுறையாக மாறியுள்ளது. (ம-7)

## பொய் கூறி...

யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருளை வைத்து ஆட்சி செய்கின்றீர்கள். உங்கள் குறைகளை வைத்துக்கொண்டு நீங்கள் மற்றவர்களை குற்றஞ்சாட்டிக் கொண்டு செல்கின்றீர்கள்.

பிற்பாக்கெட்டை அடித்துக் கொள்பவர்களைக் கள்ளர் என்று தான் சொல்லுவார்கள். அதேபோன்று தான் நீங்களும் செயற்படுகின்றீர்கள். ஆகவே அரசாங்கம் என்ற போர்வைக்குள் திருடர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டாம். எங்கள் மீது வைக்கின்ற குற்றச்சாட்டை ஒரு விரல் சுட்டிக்காட்டினால் உங்கள் மீதான குற்றச்சாட்டை நான்கு விரலும் சுட்டிக்காட்டுகின்றது.

சர்சைக்குரிய கொள்கலன் தொடர்பில் கதைத்த அர்ச்சுனா சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டார். அதற்கு நீங்கள் எடுத்த நடிவடிக்கைகள் யாவை? பழைய ஆட்சி முடிந்து விட்டது. அதை வைத்து ஆட்சி நடத்தாதீர்கள். உளவு அறிக்கை வந்தபோதும் ஏன் அந்த இரண்டு கொள்கலனையும் கைப்பற்றவில்லை எனக் கேள்வி எழுப்பினார். (ம-7)

## MUNICIPAL COUNCIL, JAFFNA
## INVITATION FOR BIDS

**Procurement of Goods & Services forJaffna Public Library - Library Digitalization Project**
**Source of Fund - Provincial Special Grant**

01. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
02. Bidding will be conducted through National Competitive Bidding.
03. Interested eligible bidders may obtain further information from Mayor/Commissioner, Jaffna Municipal Council. TP: 021 222 8874, Fax: 021 222 2334 E-Mail: mcjaffnamailc@yahoo.com office hours from 09:00 hrs. To 15:00 hrs.
04. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders
05. **Serial No 02 & 05 bidders shall also register themselves with the registrar of public contract Sri Lanka, in terms of the public contract Act No 03 of 1987.** Additional details are provided in the bidding document.
06. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **26th Sep 2025 until 09th Oct 2025 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee. The payment method will be paid by cash or bank draft drawn in favor of **Commissio ner, Jaffna Municipal Council.**
07. Bids must be delivered to the address given below on or before **10th Oct 2025 at 11.00 hrs.** Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
08. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **3rd oct 2025** at 10:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
09. The address referred to above is **Chairman, Procurement Committee, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| S/N | Bid No. | Tittle of the procurement | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period | |
| 01 | JMC/PMD/02/ Procurement for Supplying of Library Furniture Items - 2025 | Procurement for Supplying of Library Furniture Items - 2025 | 4.8 | 30 days | 49 days | 70,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 02 | JMC/PMD/02/ Procurement for Supplying of IT INFRASTRUCTURE EQUIPMENT - 2025 | Procurement for Supplying of IT INFRASTRUCTURE EQUIPMENT - 2025 | 15.0 | 60 days | 77 days | 150,000.00 | 23.01.2026 | 3,500.00 |
| 03 | JMC/PMD/02/ Procurement for Supplying of DEVELOPMENT AND IMPLEMENTATION OF DIGITAL INFORMATION DISSEMINATION AND PUBLIC ENGAGEMENT SYSTEMS FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of DEVELOPMENT AND IMPLEMENTATION OF DIGITAL INFORMATION DISSEMINATION AND PUBLIC ENGAGEMENT SYSTEMS FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 3.0 | 60 days | 49 days | 50,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 04 | JMC/PMD/02/ Procurement for Supplying of IMPLEMENTATION OF INTEGRATED LIBRARY AND DIGITAL DOCUMENT MANAGEMENT SYSTEM FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of IMPLEMENTATION OF INTEGRATED LIBRARY AND DIGITAL DOCUMENT MANAGEMENT SYSTEM FOR JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 3.0 | 60 days | 49 days | 50,000.00 | 26.12.2025 | 2,000.00 |
| 05 | JMC/PMD/02/ Procurement for Supplying of IMPLEMENTATION OF INCLUSIVE DIGITAL AND ASSISTIVE TECHNOLOGY SECTION AT THE JAFFNA PUBLIC LIBRARY - 2025 | Procurement for Supplying of IMPLEMENTATION OF INCLUSIVE DIGITAL AND ASSISTIVE TECHNOLOGY SECTION AT THE JAFFNA PUBLIC LIBRARY - 2025 | 9.0 | 60 days | 77 days | 100,000.00 | 23.01.2026 | 3,500.00 |

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Municipal Council, Point Pedro Road,**
**Nallur, Jaffna.**

(C-3958)

26.09.2025

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
(5520)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லாகம்...

வில் குறித்த நீதவானுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணை சமீப காலமாக நடைபெற்று வந்திருந்த நிலையில் அவர் பதவி விலகியுள்ளார்.

நேற்று முன்தினம் நீதிச்சேவை ஆணைக்குழுவின் சார்பில் மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்துக்குக் காலைவேளை பிரசன்னமாகி பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதவானின் சமாதான அறை மற்றும் அதில் உள்ள பொருட்களைப் பொறுப்பேற்று நீதிமன்றப் பதிவாளரிடம் கையளித்திருந்தார். (ம-7)

## ஐ.நாவில்...

சொற்பதம் பதிலீடு செய்யப்பட்டிருப்பதுடன், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சுயாதீன சிறப்பு சட்டவாதியின் பங்கேற்புடனான பிரத்தியேக நீதித்துறைப் பொறிமுறையொன்றை நிறுவுவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்த விடயம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் கடந்த 8ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரின்போது நிறைவேற்றும் விதமாக பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான 60/L.1 புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த 9ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பிரேரணை தொடர்பான உத்தியோகபற்றற்ற கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை (15) ஜெனிவாவில் நடைபெற்றதுடன், அதில் பங்கேற்றிருந்த இலங்கையின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் தமது மாற்று அபிப்பிராயங்களை முன்வைத்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளின் புதிய பிரேரணை முதலாம் கட்ட மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட வரைவு வெளியிடப்பட்டுள்ளது. முதலாவதாக வெளியிடப்பட்ட பிரேரணையுடன் ஒப்பிடுகையில், இதில் கணிசமானளவு திருத்தங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அதன்படி தீவிர பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட தாக்கங்களைச் சீரமைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளைப் பாராட்டுவதுடன் இராணுவமயமாக்கம், ஊழல் மோசடிகள், ஆட்சி நிர்வாகத்தில் பொறுப்புக்கூறலின்மை மற்றும் கடந்தகால மீறல்கள் விடயத்தில் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு என்பன உள்ளடங்கலாக இந்நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு வழிகோலிய காரணிகள் தொடர்பில் அவதானம் செலுத்தித் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம் என முன்னைய பிரேரணையில் வலியுறுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போதைய திருத்தத்தின் ஊடாக இராணுவமயமாக்கம் என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நுணாவிலில்...

வியாழக்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் மீசாலையைச்சேர்ந்த தி.யதுஸ் (வயது-21) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கனரக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதிலேயே மேற்படி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

மேலும் எதிர்த்திசையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,30,33,104)

## போதைக்கு...

அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வின் பொதுச் சபையில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது, போதைப்பொருள் மற்றும் அதற்கான சந்தை இன்று உலகளாவிய ரீதியில் பல பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றது. போதைப்பொருள் வர்த்தகம், நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதோடு அவை உலகளாவிய அரசியலுக்கும் சுகாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அதேவேளை உலகளாவிய நன்நடத்தைக்கும் அது அச்சுறுத்தலாக அமைகின்றது. போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதோடு நான் உங்கள் அனைவரையும் உலகளாவிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்காக முன்வருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் உரிய நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் போதைப்பொருளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு ஊழல் தடையாக இருப்பதோடு அது ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படுகின்றது என்பதை நாம் நம்புகின்றோம்.

அத்துடன் ஊழல் வறுமைக்கும் வழிவகுக்கின்றது. ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது ஆபத்தான ஒரு விடயமாக இருந்தாலும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருத்தல் அதனைவிட ஆபத்தானது. மனித உரிமைகள் தொடர்பான உலகளாவிய பிரகடனம் மனித இனத்தின் குறிப்பிடத்தக்க வெற்றி ஆகும் என்றார். (ம-7)

## தியாக தீபம்...

ஊரெழு மண்ணிலிருந்து இன்று காலை 7.00 மணிக்கு அவருடைய திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நடைப்பயணமாக ஆரம்பித்து நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் நினைவுத்தூபியை வந்தடைந்ததும் காலை 10.48 மணிக்கு அவர் உயிர் பிரிந்த நேரம் சுடரேற்றப்பட்டு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் நடைபெறும்.

மேலும் தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.25
சீட்டிழுப்பு இலக்கம் 5963
E 1 6 7 1 6 7
அத சம்பத
E 7 1 6 7
சீட்டிழுப்பு இலக்கம் 538
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.25
சீட்டிழுப்பு இலக்கம் 0879
மகரம் 04 23 26 46

தன நிதானய
திகதி - 2025.09.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1993
H 13 17 24 76 H
Double Chance

மெகா பவர்
திகதி 25/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2311
B 04 07 32 41 69

ஜய JAYA
திகதி 2025.09.25
சீட்டிழுப்பு இலக்கம் 0231
N 6 4 1 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4205
சீட்டிழுப்பு திகதி 25.09.2025
Y 09 17 60 68
Y

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.25
சீட்டிழுப்பு இலக்கம் 1272
மீனம் 31 33 45 52 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.09.2025 வெற்றி வாரம் 0671
G 4 6 3 8 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,030,180.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2937
சீட்டிழுப்பு திகதி 2025.09.25 தினம் வியாழக்கிழமை
24 58 73 78 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,464,911.20

சனிதா
25.09.2025 வெற்றி வாரம் 5098
06 61 73 76 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,355,538.00

சசிரி
வெற்றி வாரம் 0777
சீட்டிழுப்பு திகதி 25.09.2025
வியாழக்கிழமை
06 17 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4649
சீட்டிழுப்பு திகதி 25.09.2025 தினம் வியாழக்கிழமை
13 27 36 59 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,499,288.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
2113
Z 25 38 56 57 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.596,187,544.40
25.09.2025 வியாழக்கிழமை

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2763
சீட்டிழுப்பு திகதி : 2025.09.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,530,525.60
43 53 58 75 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Smart Better English & Music

GRADE : 1 - 5 , 6-11

ADVANCED LEVEL & GENERAL ENGLISH

BASIC , INTERMEDIATE ADVANCED ENGLISH COURSES

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், பாடசாலைக் கல்வி முடித்தவர்கள், வெளிநாடு செல்ல இருப்பவர்கள் எல்லோருக்குமான பேச்சுப்பயிற்சி ஆங்கிலம் /Spoken English

மற்றும்

IELTS கற்க விரும்புவர்கள்

Keyboard (ஓகன்) Guitar (கிற்றார்) Piano (பியானோ) Violin(வயலின்) Vcoal (Music சங்கீதம்) மிருதங்கம் வகுப்புக்கள் நடைபெறுகின்றன

(5514)



Keyboard (ஓகன்) Piano (பியானோ) London Trinity College பரீட்சைக்கு தோற்ற முடியும்

Library Facility , English Club Available

தொடர்புகளுக்கு : 0743784583 / 0777110523



## வெளிநாட்டில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை

01. பிறப்பு - 1995, நட்சத்திரம் - புனர்பூசம், ராசி - மிதுனம், தொழில் - Engineer, இடம் - கனடா, எதிர்பார்ப்பு - உள்நாடு — தொ.இல : MM19114
02. பிறப்பு - 1998, நட்சத்திரம் - சித்திரை 1 பாதம், ராசி - துலாம், தொழில் - Sales and marketing, இடம் - கனடா, எதிர்பார்ப்பு - உள்நாடு — தொ.இல : MM19199
03. பிறப்பு - 1988, நட்சத்திரம் - மிருகசீரிடம், ராசி - மிதுனம், தொழில் - Sales and marketing, இடம் - லண்டன், எதிர்பார்ப்பு - உள்/வெளிநாடு — தொ.இல : MM19181

## வெளிநாட்டில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை

01. பிறப்பு - 1996, நட்சத்திரம் - மூலம், ராசி - தனுசு, தொழில் - Teacher, இடம் - கனடா, எதிர்பார்ப்பு - உள்/வெளிநாடு — தொ.இல : MM19423
02. பிறப்பு - 1997, நட்சத்திரம் - உத்தராடம், ராசி - கன்னி, தொழில் Hospitality and Tourism, எதிர்பார்ப்பு - உள்/வெளிநாடு — தொ.இல. : MM17378
03. பிறப்பு - 1990 (Divorced), நடசத்திரம் - மூலம், ராசி - தனுசு, தொழில் - Doctor, எதிர்பார்ப்பு - உள்/வெளிநாடு, இடம் - ஜேர்மனி — தொ.இல : MM17936

077 335 3461, 077 408 8241

(5519)



# தேவை

உழவு இயந்திரப் பெட்டியின் சில்லு தேவை. (நல்ல நிலையில் உள்ள பழைய சில்லு)

தொடர்பு : 075 719 0110



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது )

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)


சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Main Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3960)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236


# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி 26.09.2025 இன்று பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற

## உயர்திரு. க. கதிரவேற்பிள்ளை சிவச்சந்திரன்

(இலங்கை திட்டமிடல் சேவை - தரம் I)

B.Sc (Agri), M.Sc (Agri), P.G.Dip in Mgt.

### சேவை விபரங்கள்

| இல | பதவிகள் | காலப்பகுதி | சேவையாற்றிய நிலையம் |
|---|---|---|---|
| 01 | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01.06.1998 - 01.01.2002 | கமநல அபிவிருத்தி திணைக்களம் - திருகோணமலை. |
| 02 | இலங்கை திட்டமிடல் சேவை – பயிற்சி | 02.01.2002 - 03.03.2002 | இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம். (SLIDA) |
| 03 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 04.03.2002 - 30.04.2005 | அகதிகள் புனர்வாழ்வு புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சு |
| 04 | வெளிக்கள இணைப்பாளர் | 01.05.2005 - 31.12.2008 | ஜேர்மனி தொழில்நுட்ப நிறுவனம். (GTZ) |
| 05 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் | 01.01.2009 - 02.06.2015 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம். |
| 06 | உதவித் திட்டமிடல் மற்றும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் | 03.06.2015 - 30.06.2021 | மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம். |
| 07 | திட்டமிடல் பணிப்பாளர் | 01.07.2021 - 28.09.2025 | பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகம், வட மாகாணம் |

வந்தனைக்கு உரித்தான மகத்துவம் மிக்கோரே
சிந்தனையில் நிலைகொள்வர் சிலை எழுத்துப் போலென்றும்
பண்புடைய நன்மாந்தர் புகழ் துலங்கும் எந்நாளும்
பண்ணெடுத்துக் கவிபாடி வாழ்த்துகிறோம் மணிவிழாவில்

சிந்தனையில் தெளிவிருக்கும் சீரிய இலக்கிருக்கும்
வந்ததை எதிர்கொள்ளும் அசாத்தியத் துணிவிருக்கும்
அன்புநிறை அரவணைப்பில் சமத்துவம் நிலைத்திருக்கும்
மந்திரப் புன்னகைதான் மதிமயங்கச் செய்திடுமே

திட்டமிடல் சேவைதனில் உயர்வான ஆசனமாம்
பணிப்பாளர் பதவிக்கோர் பொறுப்பான அலுவலராய்
கடமையே கண்ணாகக் கருமமே மூச்சாக
ஆற்றினார் நற்சேவை எம் சிவச்சந்திரனார்

ஆன்றோரும் சான்றோரும் பாவிசைக்க – என்றும்
மாகாணத் திட்டமிடலில் பெயர் நிலைக்க
சீரோடும் புகழோடும் நிலை பெறுக – என்று
பிரியாத விடை தந்தோம் – வாழியவே ....!

வாழ்த்துவோர்: வட மாகாண இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர் சங்கம்

(5516)


## வட இந்திய தலயாத்திரை

ஆரம்பம் 10.11.2025 | நாட்கள் 12 | Amount 350,000

காசி / வாரணாசி
- விசாலாட்சி சமேத விஸ்வநாதர்
- அன்னபூரணி
- கால பைரவர்
- சங்கடஹர மோட்ச ஆஞ்சநேயர்
- துர்க்கா மந்திர்
- கங்கை ஆரத்தி
- துளசிதாசர் மந்திர்
- சோழியம்மன்
- பாதாள வராகி அம்மன்
- 64 படித்துறை
- கங்கையில் தர்ப்பணம்

அயோத்தி
- ஸ்ரீ ராம ஜென்மபூமி
- சராயு ஸ்நானம்
- அனுமன் மந்திர்
- சீதை பூமியுள் புதையுண்ட இடம்
- மதுரா
- தாஜ்மஹால்
- ஷீரடி சாய் பாபா
- சனி சிங்கனாப்பூர்

திருவேணி சங்கமம்
- கங்கை, ஜமுனா, சரஸ்வதி சங்கம ஸ்நானம்
- பாதாள ஆஞ்சநேயர்
- இராமேஸ்வரம்
- உத்திர கோஷ மங்கை
- திருப்புலானி
- மதுரை மீனாட்சி
- சென்னையில் ஒருநாள் Shopping

- உள்நாட்டு & சர்வதேச விமான பற்றுச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு சமைத்துத் தரப்படும்.
- தண்ணீர்ப் போத்தல் & தேநீர் பழச்சாறு.
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுச்சீட்டுகள்
- இலங்கை சுற்றுலா வழிகாட்டி
- இந்திய சுற்றுலா வழிகாட்டி (தமிழ் & ஹிந்தி தெரிந்தவர்)

## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடான யாத்திரை

ஆரம்பம் 01.11.2025 07.12.2025 16.01.2026 | யாத்திரிகர்:- 10 | நாட்கள் 12 | Amount 250,000



தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனிபகவான், திருநள்ளாறு, நளன் குளத்தின் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

சென்னையின் ஒரு நாள் Shopping

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
srianganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
Tel: 077-7680102, 077 7362154

(1586)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org